மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

07.10.2023 (சனிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 08 | ஊக்குவிப்பு : ரூ 30.00

# சர்வதேசத்தை திசைதிருப்பும் இலங்கையின் ஆணையங்கள்!

## - ஐ.நாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்



தமிழ் மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை கான நீதி ஆகியவற்றில் இருந்து சர்வதேச சமூகத்தை திசை திருப்பு வதையும் நோக்கமாகக் கொண்டதே இலங்கையின் உண்மை மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழு என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நடைபெற்று வரும் ஜெனீவா ஐ.நா மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடரில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் உரையாற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் திரு. மணிவண்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது உரையில், கடந்த பல ஆண்டுகளாக பத்துக்கும் இலங்கை மேற்பட்ட ஆணைக்குழுக்களை நிறுவியும் எந்த முடிவும் இல்லை. ஆணைக்குழுக்களை நிறுவுதல் என்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான இலங்கையின் கருவியாகும்.

இம்முறை, தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடன் ஒப்பிட்டு தன்னை பக்கம் 05

# வடக்கு, கிழக்கில் ஹர்த்தால்: 7 கட்சிகள் கூட்டாக அறிவிப்பு



முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவண ராஜாவின் பதவி விலகலுக்கு நீதி கோரி எதிர்வரும் வாரம் வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் பொது முடக்க போராட்டத்தை (ஹர்த்தால்) முன்னெடுக்கவுள் ளதாக 7 தமிழ் தேசிய கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

7 தமிழ் தேசிய கட்சிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்தார்.

பொது முடக்க போராட்டத்திற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் இது தொடர்பில் பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள் ளதாகவும் சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.வி. விக்னேஸ்வரன், சித்தார்தன், முன்னாள் நாடாளுமன்ற பக்கம் 05

# உயிரிழந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபா இழப்பீடு



கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் பேருந்தொன்றின் மீது மரம் விழுந்ததில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத் துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம், உரிய இழப்பீட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சுக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு இலங்கை பக்கம் 05

# தமிழ் எம்.பிக்கள் சபையில் போராட்டம்



மட்டக்களப்பு – மயிலத்தமடு, மாத வனை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பில் தீர்வு கோரி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றைய சபை அமர்வின் போது நாடா ளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு பேசு வதற்கான சந்தர்ப்பம் பக்கம் 05

தேசியம்
THESIYAM

## கல்வியில் — — — — — — —

# பெற்றோர்களின் பங்களிப்பும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்




நம்மையும் நாம் வாழும் சமூகத்தையும் சீர்திருத்துவதே கல்வி ஆகும். இன்றைய காலக்கட்டத்தில் கல்வி எனப்படுவது கட்டாயமான ஒன்றாகும். கல்வியின் அவசியம் பற்றி பல்வேறு அறிஞர்களும், பல்வேறு வரைவிலக்கணங்களை கூறியுள்ளனர். எனவே கல்வி கற்பதற்கு மாணவர்களை தயார்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பும் ஆசிரியர்களின் பங்களிப்பும் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என நோக்குவோம்.

மாணவர்களின் அடிப்படைக் கல்வியும், வாழ்க்கைக் கல்வியும், ஒவ்வொரு வீட்டுச் சூழலிலிருந்தே ஆரம்பிக்கின்றது. எனவே கல்வியின் தேவையை ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டிய தேவை உள்ளது.

சில பெற்றோர்கள் ஆசியர்களை தங்களது பிள்ளைகள் முன்னிலையில் விமர்சனம் செய்வதால் ஆசிரியர் மீதான பிள்ளைகளின் பற்று குறைகின்றது. ஆசிரியர் தொடர்பான தவறான மதிப்பிடல் ஏற்படுகின்றது. இதன் விளைவு மாணவர்களை தவறான நடத்தைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறான பிள்ளைகள் மீது ஆசிரியர்களின் அக்கறையும் குறைவாகவே காணப்படுகின்றது. அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளை தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

ஆசிரியருடன் தொடர்பில் இருக்கின்றனர். பிள்ளை கற்ற விடயங்களை பகிர்ந்து கொள்கின்றனர். பயிற்சி கொப்பியை பரிசோதிக்கின்றனர். நடைபெறாத பாடங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றனர். இது தொடர்பில் ஆசிரியருடன் கலந்துரையாடுகின்றனர். இவ்வாறு பெற்றோர்களால் கண்காணிக்கப்படும் பிள்ளைகளின் எதிர்காலமே சிறப்பாக அமைகின்றது.

பாடசாலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்த்து பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோர்களும் உள்ளனர். இதனால் பாடசாலைக்குரிய கலாசாரங்கள், விழுமியங்கள், மாணவர் ஒழுக்கம் என்பன பாதிக்கப் படுகின்றன.

சில கிராமப்புற பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதித்து உறவினர் வீடுகள் அல்லது விடுதிகளில் தமது பிள்ளைகளை தங்க வைக்கின்றனர். இதனால் பிள்ளை பெருமளவு நடத்தை மாற்றங்களுக்கு உள்ளாகின்றது.

பெற்றோரின் தவறான உணவுப் பழக்க வழக்க முறைகளினாலும் பிள்ளைகள் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். பல தொற்றா நோய்களுக்கு சிறு வயதிலேயே ஆளாகும் நிலை ஏற்படுகின்றது.

அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வேலைகளையும் சேர்த்து செய்வதனால் பிள்ளைகள் தமக்கு ஏற்படும் சவால்களை சுயமாக எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு கலாசாரம், மரபுகள் போன்றவற்றை கற்றுக் கொடுக்க மறந்து விடுகின்றனர். இதனால் தமது சமூக கட்டுப்பாடுகளை பிள்ளைகள் மீறும் நிலை ஏற்படுகின்றது.

எதிர்கால சந்ததியினரான எமது பிள்ளைகளை சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும்சட்டத் திட்டங்களை கடைப்பிடிப்பவராகவும் உருவாக்க வேண்டியது பெற்றோராகிய எமது ஒவ்வொருவரினதும் பாரிய பொறுப்பு ஆகும்.

எமது பிள்ளைகளின் கற்றல் சிறப்பாக அமையவேண்டும்எனபோராடும்ஆசிரியர்களும் அதிகமாகவே காணப்படுகின்றனர். வகுப்பறை எனும்போது பல்வேறு பெற்றோர்களின் பின்னணியில் இருந்து வரும் மாணவர்களால் நிரப்பப்படுகின்றது.

எனவே பிள்ளைகளின் கற்றல் உலகமானது எமது சமூகத்தோடு மிகவும் பொருத்தப்பாடு உடையதாகவே காணப்படுகின்றது. சமூகத்தில் பிள்ளைகள் கற்றுக் கொண்டவற்றையே பாடசாலையில் பிரதிபலிக்கின்றனர். தமது நண்பர்களையும் இதற்குள் இணைத்துக் கொள்கின்றனர். எனவே ஒரு ஆசிரியரினால் வெவ்வேறு மாணவர்களின் கற்றல் திறனை அறிந்து கொள்வது கடினம் இருப்பினும் தமது மாணவர்களின் கல்வியின் வளர்ச்சிக்கு பாரிய சவாலை எதிர்கொள்கின்றனர்.

நடத்தை குறைந்த பிள்ளைகளை பெற்றோர் உருவாக்கியுள்ளனர் என்றால் இவர்களை சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும் சட்டத்திட்டங்களை பின்பற்ற கூடியவர்களாகவும் உருவாக்க ஆசிரியர்கள் பெருமளவு தமது பங்களிப்பினை செலுத்த வேண்டி உள்ளது எனலாம்.

இந்த உலகில் ஆசிரியர் எனும் போது மாணவர்களின் கல்விப் பாடத்தை மட்டுமல்ல வாழ்க்கைப் பாடத்தையும் கற்றுக் கொடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

எமது பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்கின்றனர். நேர்மையை கற்றுக்கொடுக்கின்றனர். மாணவர்களுக்கு மதிப்பளிக்கின்றனர். மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பவர்களாக காணப் படுகின்றனர்.

ஒரு ஆசிரியராக மாணவர்களின் நல்ல நடத்தையை உறுதி செய்கின்றனர். மாணவர்களின் கற்றல் மற்றும் வேலைப் பழக்கத்தை வளர்க்க பொறுமையாக உதவி செய்கின்றனர். பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றனர். தமது மாணவர்கள் ஒவ்வொருவரினதும் மீதான தனிப்பட்ட அக்கறை மற்றும் அவர்களின் கற்றல் ஆர்வத்தை தூண்டுகின்றனர்.

பாடசாலையின் அடிப்படை விதிகளுக்கும் மாணவர்களுக்கும் இடையே போராடும் போராளியாக மாறுகின்றனர். மாணவர்களின் பிரழ்வுகளின் போது அவர்களுக்கு சரியான வழிகளுக்கு இட்டுச் செல்கின்றனர். வகுப்பறையில் நேர்மையான கற்றல் திறன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றனர். மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருகின்றனர். மாணவர்களின் அறிவாற்றல் மற்றும் சமூக வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றுகின்றனர்.

எனவே பெற்றோர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எமது பிள்ளைகளின் கல்வி, வாழ்க்கை முன்னேற்றத்திற்காக ஆசிரியர்களுக்கு கரம் கொடுப்போம் சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குவோம்.

**முருகையா,**
**தவமணிதேவி, வட்டகொட.**



# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் போக்குவரத்து ஜனவரி முதல் முழுமையாக முன்னெடுக்கப்படவுள்ளது



தமிழகத்தின் நாகப்பட்டினம் மற்றும் இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முழுமையான அளவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று குறித்த இரு துறைமுகங்களுக்கும் இடையிலான கப்பல் பரீட்சார்த்த நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்காக தமிழகத்தின் நாகப்பட்டினம் துறைமுகத்தை ஆழப்படுத்தி தூர்வாரும் பணிகளை கடந்த மாதம் தமிழக அமைச்சர் எ.வ.வேலு, ஆரம்பித்து வைத்தார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் குடியுரிமை பரிசோதனைகள், மருத்துவ பரிசோதனைகள், பயணிகள் கொண்டு வரும் உடைமைகளை பாதுகாப்பாக வைப்பதற்கான வசதிகள் மற்றும் பயணிகளின் பொதிகளை சோதனையிடுதல் என சகல நடவடிக்கைகளுக்குமாக தனித்தனியாக அறைகள் கட்டப்பட்டுள்ளன.

பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பித்த பின்னர் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 2 கப்பல்கள் இலங்கைக்கு பயணிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு கப்பல், நாகப்பட்டினத்திலிருந்து காலை 10 மணிக்கு இலங்கை காங்கேசன்துறை நோக்கி செல்லும் எனவும், எதிர்த்திசையில் இலங்கையிலிருந்து மாலை 5 மணிக்கு நாகப்பட்டினம் துறைமுகம் நோக்கி கப்பல் புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் கொச்சி துறைமுகத்திலிருந்து நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு கப்பலொன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனது பயணத்தை ஆரம்பித்தது.

400 கடல் மைல் தூரத்திலுள்ள நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு இந்த கப்பல் நேற்று முன்தினம் வந்தடைந்து.

இந்த நிலையில், நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கையின் காங்கேசன்துறை துறைமுகத்திற்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து சோதனை முறையில் முன்னெடுக்கப்படும் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கரும்புகையை வெளியிடும் வாகனங்கள்: 'வாட்ஸ் அப்' இல் முறையிடுமாறு அறிவிப்பு

அதிக அளவில் கரும்புகையை வெளியிடும் வாகனங்கள் தொடர்பில் மக்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

070 3500 525 எனும் 'வாட்ஸ் அப்' இலக்கத்தின் ஊடாக இந்த விடயம் தொடர்பான முறைப்பாடுகளை மக்கள் முன்வைக்க முடியும்.

அதிக அளவில் கரும்புகையை வெளியிடும் வாகனங்களையும் அவை பயணிக்கும் இடத்ததையும் தெளிவாக அறியக்கூடிய வகையிலான படத்தை இந்த இலக்கத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

அந்த தகவலின் அடிப்படையில், நிதியத்தின் கண்காணிப்பு பிரிவு விசாரணைகளை முன்னெடுக்கும் என்பதுடன், குறித்த வாகனத்தை அடையாளம் கண்டு, குறைபாட்டை சீர்செய்வதற்கு ஒரு மாத அவகாசம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த காலப்பகுதிக்குள் அந்த குறைபாடு சீர்செய்யப்படாத பட்சத்தில், வாகனத்தின் வருமான வரி அனுமதிப்பத்திரம் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படும் என வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தெரிவித்துள்ளது.



வாகன புகை பரிசோதனை நிலையங்கள் மற்றும் நடமாடும் நிலையங்களில் உரிய முறையில் சேவை வழங்கப்படாத பட்சத்தில், அது தொடர்பில் முறைப்பாடு வழங்க முடியும் எனவும் அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, 070 3500 525 எனும் 'வாட்ஸ் அப்' இலக்கத்திற்கு அல்லது 011 2 66 99 15 எனும் இலக்கத்திற்கு முறைப்பாடுகளை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு, கண்டி தேசிய வைத்தியசாலைகளில் தடைப்பட்டுள்ள அஞ்சியோகிராம் பரிசோதனை!



கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகளில் அஞ்சியோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சியோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளதால், பல இருதய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என ரச கதிரியக்க தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

பரிசோதனை இயந்திரங்கள் செயலிழந்து 6 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை சீர் செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் குறித்த பரிசோதனை, சிகிச்சைக்கான காத்திருப்பு பட்டியலில் 8 ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளர்கள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஞ்சியோகிராம் பரிசோதனையை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவாகும் என அரச கதிரியக்க தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம சுட்டிக்காட்டியுள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸின் உறுப்புரிமையில் இருந்து நசீர் அஹமட்டை நீக்கியமை சட்டபூர்வமானது

## - உயர் நீதிமன்றம் தீர்ப்பு



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நசீர் அஹமட்டை நீக்கியமை தொடர்பில், கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், நசீர் அஹமட்டிற்கு அனுப்பிய கடிதத்தை சவாலுக்குட்படுத்தி, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நசீர் அஹமட்டை நீக்கியமை, சரியானதும் சட்டபூர்வமானதுமான தீர்மானம் என உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில், உயர் நீதிமன்ற தீர்ப்பானது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ .சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 25 வருடங்களாக கட்சி மாறுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்தில் தங்களுக்கு சாதகமான தீர்ப்புகளை தான் பெற்று வந்திருக்கிறார்கள். ஆகையால், இது அதற்கு மாறுபட்ட ஒரு தீர்ப்பாக அமைந்துள்ளது என சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அமைச்சுப் பதவிக்காக கட்சி மாறுபவர்களுக்கு இதுவொரு எச்சரிக்கையாக இருக்கும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 17,599 வாக்குகளை பெற்ற நசீர் அஹமட் நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

எனினும், கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் அவரை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது.

கட்சி எடுத்த தீர்மானத்திற்கு மாறாக வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை, சுற்றாடல் அமைச்சை பொறுப்பேற்றமை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அவரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக, கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் அறிவித்த கடிதத்தை ஆட்சேபித்து நசீர் அஹமட் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தததுடன், அது தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், ப்ரீதி பத்மன் சூரசேன ,எஸ்.துரைராஜா, மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாத்தினால் நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

நசீர் அஹமட் தாக்கல் செய்திருந்த மனுவை நிராகரித்த நீதியரசர்கள் குழாம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்டமை சரியானதும் சட்டபூர்வமானதுமானதுமான தீர்மானம் என அறிவித்தது.

உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம், நசீர் அஹமட்டின் நாடாளுமன்ற பதவி வறிதாவதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்திலுள்ள அலி சாஹிர் மௌலானா நாடாளுமன்றத்திற்கு செல்லவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான கடிதம் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கூறினார்.

# வீதி ஓரங்களில் முறிந்து விழும் அபாயம் உள்ள மரங்களை அகற்றுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தல்

தி ஓரங்களில் முறிந்து விழும் அபாயத்தில் உள்ள பாரிய மரங்கள் தொடர்பில் உடனடியாக ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மக்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு அவர் பணித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அதிகாரிகளுக்கு அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளையும் இந்த நடவடிக்கையில் இணைத்துக்கொள்ளுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் பஸ் ஒன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.







### சர்வதேசத்தை திசைதிருப்பும்...

நியாயப்படுத்த இலங்கை திட்டமிட்டுள்ளது. ஆனால் இரண்டுக்கும் இடையே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. அதாவது தென்னாப்பிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் என்பது பாதிக்கப்பட்டவர்களால் முன்மொழியப்பட்டதும் நிர்வகிக்கப்பட்டதுமாகும்.

ஆனால் இலங்கையில் பாரிய அட்டூழியங்களை நிகழ்த்திய வெற்றியாளர்களே இதனை முயற்சியை முன்வைக்கின்றனர்.

இதேபோன்ற வழிகளில் தொடங்கப்பட்ட முந்தைய 'உண்மைக்கான ஆணையங்கள்' தோல்வியடைந்துள்ளன.

ஏனெனில் நியமிக்கப்பட்ட ஆணையங்கள் பாதிக்கப் பட்டவர்கள் நம்பவில்லை. ஆணையங்களிடம் வாக்குமூலம் வழங்க முன்வந்த பல பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு தரப்பினராலும் மிக மோசமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இலங்கையின்முன்மொழியப்பட்ட 'உண்மை ஆணையம்' என்று அழைக்கப்படுவதைப் பரிசீலித்து, சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் நீதியைப் பெற வேண்டும் என்றும் ஐ.நா மனித உரிமைச் சபையினை வலியுறுத்துகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

### வடக்கு, கிழக்கில்...

உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், மற்றும் தியாகராஜா நிரோஷ், மாவை சேனாதிராஜா, கலையமுதன் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடிய பின் அடுத்த வாரம் ஹர்த்தால் நடவடிக்கை தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது முடக்கத்திற்கான திகதி சில தினங்களுக்குள் அறிவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயிரிழந்தவர்களுக்கு...

போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது என அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

கொழும்பில் இருந்து மத்துகமை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்றின் மீது, கொழும்பு – கொள்ளுப்பிட்டி பகுதியில் மரம் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

பயணிகளை ஏற்றுவதற்காக பேருந்து நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் மேலும் 17 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 100 வருடங்கள் பழமை வாய்ந்த ரொபரோஸியா வகையைச் சேர்ந்த மரம் ஒன்றே பேருந்தின் மீது முறிந்து வீழ்ந்துள்ளது என தெரியவந்துள்ளது.

எனினும், இந்த மரத்தை அகற்ற வேண்டும் என எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை என கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ரானி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த மரங்கள் மேலும் சில பகுதிகளில் உள்ளன.

இந்த மரங்களின் தன்மை தொடர்பில், ஆராய்ந்து அவற்றை அகற்றுவது தொடர்பில், எதிர்வரும் காலங்களில் தீர்மானிக்கப்படும் என அவர்தெரிவித்துள்ளார்.

### தமிழ் எம்.பிக்கள்...


வழங்கிய போது, உரையாற்ற ஆரம்பித்த சாணக்கியன் திடீரென பதாதைகளை தாங்கிய வண்ணம், சபையின் நடுவே வந்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தினை ஆரம்பித்தார்.

சாணக்கியனை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், கலையரசன், வினோ நோகராதலிங்கம் உள்ளிட்டோரும் சபைக்கு நடுவே வந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நிலங்கள் மற்றும் வளங்களை அழிக்காதே என கோஷமிட்டு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

வெளிவந்துவிட்டது!
தமிழர் தாயகம் எங்கும்!
வார இதழ்
தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්
பத்திரிகை!
கல்வி,சமூக,அரசியல்
வாராந்த இதழ்!
அனைத்து பத்திரிகை
விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
தொடர்புகளுக்கு : 076 567 3339

## பிரபல ஜோதிடர் இந்திக்க கைது!



மதக் கோட்பாடு மற்றும் நம்பிக்கைகளை அவமதித்த குற்றச்சாட்டில் ஜோதிடர் இந்திக்க தொட்டவத்த கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி யூடியூப் காணொளிகள் ஊடாக நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தியதாக அவருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் 12 தரப்பினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் ஜோதிடர் இந்திக்க தொட்டவத்த காவல்துறை கணினி குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அவர் நேற்று பிற்பகல் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, நீதிவானின் உத்தரவுக்கமைய, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளில் இன்று சனிக்கிழமை 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் இன்று மாலை 5 மணி முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**
**021 222 7557 / +94 76 567 3339**

# மூளைசாலிகள் வெளியேற்றம் தற்போது தீவிரமடைந்துள்ளது!

## முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தாமல் எப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது . ஆகவே உடன டியாக தேசிய தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும்.

மூளைசாலிகள் வெளியேற்றம் பாரிய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். இந்த பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் எந்த நட வடிக்கைகளையும் எடுக்காமல் தொழிற்றுறையினருடன் முரண்பட்டுக் கொண்டிருக்கிறது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

படித்த இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதை பிரதான நோக்கமாக கொண்டுள்ளார்கள். 30 வருட கால யுத்த காலத்தில் மூளைசாலிகள் வெளியேறியதை போன்று தற்போதும் மூளைசாலிகள் வெளியேறினார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்த காலத்தை காட்டிலும் தற்போது மூளைசாலிகள் வெளியேற்றம் தீவிரமடைந்துள்ளது.

விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள் உட்பட சுகாதார தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறுவது பாரதூரமானது. வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளி யேறுவதால் சுகாதார கட்டமைப்பு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் நடுத்தர மக்கள் நெருக்கடிக் குள்ளாகியுள்ளார்கள். ஒரு வைத்தியர் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 50 பேருக்கு சாதாரண அளவு சிகிச்சையளிக்க முடியும்.

ஆனால் தற்போதைய நிலையில் அரச வைத்தியசாலைகளில் வைத்தியர் ஒருவர் ஒரு நாளைக்கு 200 இற்கும் அதிகமானோருக்கு சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

சுகாதார கட்டமைப்பை போன்று பல்கலைக்கழக கல்வி கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காரணமாகபெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள்இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமானது. கல்வித்துறை வீழ்ச்சியடைந்தால் சிறந்த எதிர்கால தலைமுறையினரை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

மூளைசாலிகள் வெளியேற்றத்துக்கு தீர்வு காண அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது,தொழிற்றுறையினருடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வதை தவிர்த்து அவர்களுடன் அரசாங்கம் முரண்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாட்டில் அரசியல் நெருக்கடி தோற்றம் பெற்றதன் பின்னரே சகல பிரச்சினைகளும் தோற்றம் பெற்றன. இன்று ஆளும் கட்சியும் பிளவ டைந்துள்ளது, எதிர்க்கட்சிகளும் பிளவ டைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையுடன் தான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். ஆகவே உடனடியாக தேசிய தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வார இதழ்
தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM
தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME

No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557 | Whatsapp : +94 76 567 3339 | E-mail : thesiyamnews@gmail.com

# அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களே புத்திஜீவிகள் வெளியேறுவதற்கு காரணம்!

## - சஜித் பிரேமதாச சபையில் குற்றச்சாட்டு

நாட்டின் அனைத்து துறைகளில் இருந்தும் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். ஆனால் இதற்கான காரணத்தை ஆராய்ந்து இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது.

அரசாங்கமே புத்திஜீவிகளை வெளியேற்ற தூண்டிவருவதாக இருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் முக்கியமான அனைத்து துறைகளைச்சேர்ந்த புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறு வருகின்றனர். உலகில் இவ்வாறு புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறும் நாடுகளில் ஈரான், மியன்மார், வடகொரியா போன்றன இருப்பதுடன் உலகில் புத்திஜீவிகளை சேர்த்துக்காள்ளும் நாடுகளாக சுவீடன், டென்மார்க், அமெரிக்கா போன்ற நாடுகளை குறிப்பிடலாம்.

அத்துடன் கடந்த சில வருடங்களாக புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறும் வீதம் அதிகரித்து செல்கிறது. ஆனால் இது தொடர்பாக தேடிப்பார்க்க அரசாங்கம் அமைச்சரவை உப குழுவொன்றையாவது அமைக்க தவறி இருக்கிறது.

குறைந்தபட்சம் நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றையாவது அமைக்க தவறி இருக்கிறது. ஆனால் புத்திஜீவிகள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறும் நடவடிக்கை கடந்த காலங்களிலும் இடம்பெற்றிருக்கிறது.

1974இல் சிறிமா பண்டாரநாயக்க அம்மையாரின் காலத்தில் இவ்வாறு புத்திஜீவிகள் வெளியேற ஆரம்பித்த போது, இது தொடர்பாக தேடிப்பார்க்க அமைச்சரவை உபகுழுவொன்றை அமைத்து நடவடிக்கை எடுத்திருந்தது.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி நாட்டை ஸ்திரப்படுத்த சிறந்த வாய்ப்பு என அரசாங்கம் தெரிவித்து வந்தது.

ஆனால் வெரிடேச் ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியால் எமது நாட்டில் நூற்றுக்கு 28 வீதமானவர்களுக்கே நன்மை கிடைக்கிறது.

ஆனால் தற்போது நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவி தற்போது தாமதமடைந்துள்ளதால் அந்த தாகையும் குறைவடையும் என்றே நினைக்கிறேன்.

அத்துடன் நாட்டில் இருக்கும் புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காரணங்களை தேடிப்பார்க்கும்போது, வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளமை, அரசியல் ஸ்திர தன்மை இல்லாமை, வெளிநாடுகளில் வழங்கப்படும் அதிக சம்பள வசதிகள், பணவீக்க அதிகரிப்பு, உணவு பாதுகாப்பு இல்லாமை போன்ற விடயங்களே அமைந்துள்ளன.



அரசாங்கம் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கு வரி அதிகரிப்பையே மேற்கொண்டுள்ளது. ஆனால் இந்த வரி அதிகரிப்பு சாதாரண மக்கள் மீது சுமையை அதிகரிக்கும் வகையிலேயே மேற்கொண்டிருக்கிறது. தனவந்தர்கள் பெரும் நிறுவனங்களுக்கு எந்தவித வரி அதிகரிப்பு இல்லை.

எனவே அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்கள் மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மேற்கொள்ளும் பிழையான நடவடிக்கை போன்ற காரணங்களாலே புத்திஜீவிகளின் வெளியேற்றம் அதிகரித்து வருகிறது.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் புத்திஜீவிகளின் வெளியேற்றத்தில் எமது நாடு உயர்ந்த நிலையில் இருந்து வருகிறது.

அதனால் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத்தவறினால் நாட்டின் முக்கியமான அனைத்து துறைகளும் செயலிழக்கும் அபாயம் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.



தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!

# வெளிவந்துவிட்டது!

## தமிழர் தாயகம் எங்கும்!

வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM තේසියම්

## பத்திரிகை!

## கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!

## அனைத்து பத்திரிகை

விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

**தொடர்புகளுக்கு : 076 567 3339**